# ஒரு மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள்

மதம் என்பது நம்பிக்கையின் ஊடாக உருவான ஒன்றாக கருதப்படுகின்றது. மதத்தின் மூலம் மனிதர்கள் நல்வழிப்படுத்தப் படுகின்றமை பிரதான இலக்காக கருதப்படுகின்றது. மதம் முறையாக பின்பற்றப்படும் போது பல்வேறு நற்குணங்கள் எம்மிடையே வளர்க்கப்படுகின்றன. நம்பிக்கை, மன்னிப்பு, பொறுமை, கருணை, அன்பு, மற்றவர்களையும் தன்னைப் போல் நினைக்கும் பண்பு, மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை, மதத்தின் மீது பற்று, கடவுள் மீது பக்தி, பெற்றவர்களை பேணி பாதுகாக்கும் தன்மை, பிற உயிர்களின் மீது அன்பு போன்ற உயரிய குணங்கள் விருத்தியடைவதற்கு மதங்கள் பெரும் உதவியாக இருக்கின்றது. இக்குணங்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் முறையான மதப்பின்பற்றுதல்கள் ஒரு மனிதனுக்கு அத்தியவசியமாகின்றது. எல்லா மதங்களுமே மனிதனை நல்வழிப்படுத்துவதற்கான நல் கருத்துக்களையும், நல்லொழுக்க நெறிகளையும் தான் முன்வைக்கின்றன.

உலகில் பிரதானமாக பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் போன்ற சமயங்கள் மிக பிரதான நான்கு சமயங்களாக பின்பற்றப்படுகின்றன. உலக மக்கள் இந்நான்கு சமயங்களிலேயே பிரிவடைந்து காணப்பட்டாலும், இவ்நான்கு சமயங்களும் ஒரே கருத்தையே அதாவது, "மனிதனை நல்வழிப்படுத்துதல்" என்ற முக்கியமான கோட்பாட்டையே வழியுறுத்துகின்றன. எனவே, மதங்களை பின்பற்றும் சுதந்திரம் வெளிப்படையாக காணப்படுவது மிகவும் அவசியமானதொன்றாகவே கருதப்படுகின்றது. ஒரு மனிதனுக்கு தான் ஒரு மதத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம் அதாவது, ஒரு மதத்தின் கோட்பாடுகளையும் அம்மதத்தின் நடைமுறைகளையும் பின்பற்றுவதற்கான "மத சுதந்திரம்" காணப்படுகின்ற நாடுகளிலேயே நல்குணங்களை உடைய நல்மக்களும் காணப்படுகின்றனர். அதிகமாக மக்கள் நல்லொழுக்க பாதையில் இருந்து முரண்பட்டு செல்வதற்கான காரணம் மத நம்பிக்கைகள் குறைவடைவதனாலேயே ஆகும். எனவே சுதந்திரமாக மதங்களை பின்பற்றும் போது

மன்னிப்பு, பொறுமை, நம்பிக்கை மற்றும் கருணை போன்ற மனிதாபிமான குணங்கள் மக்களிடையே விருத்தியடைவதற்கு ஏதுவாக அமைகின்றது. இனி ஒவ்வொரு சமயமும் எவ்வாறு மேற்குறிப்பிட்ட குணங்களை மக்களிடையே வெளிக்கொண்டு வருகின்றன என்பதை அவதானிப்போம்.

முதலாவதாக இந்து சமயத்தை எடுத்து நோக்கும் போது ஆதியும், அந்தமும் இல்லா சமயம் என குறிப்பிடப்படுகின்றது. இந்துமதத்தின் முன்னோர்களின் கருத்துக்கள், பெரியோர்களின் வாழ்க்கை ஒழுக்க நெறிகள், வரலாறுகள், சமய தலைவர்களின் போதனைகள் "பகவத்கீதை", "பிரஸ்தானதிரையம்" என்ற நூல்களில் இருந்து இந்து சமயத்தில் முக்கியமான கருத்துக்களையும், நன்னெறிகளையும் வெளிப்படுத்துகின்றன. இச்சமயத்தைப் பின்பற்றும் மக்கள் இந்நூல்களில் உள்ள நன்னெறிகளை கற்று அச்சமய சடங்குகளையும், சம்பிரதாயங்களையும், அவர்களுக்கேற்ற வழிபாட்டு முறைகளையும் பின்பற்றி நல்ல பழக்கவழக்கங்களையும் கற்றுக்கொள்கின்றனர். மேலும் இச்சமயக்குரவர்கள் மற்றும் சமயத்தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்கள் பின்பற்றிய பொறுமை, மன்னிப்பு, கருணை, நம்பிக்கை மனிதாபிமானம், மற்றவர்களுக்கு உதவும் தன்மை போன்ற நற்குணங்களை பெற்றுக்கொள்கின்றனர். இச்சமயத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம் உலகின் பெரும்பாலான நாடுகளில் காணப்படுகின்றது. இந்து சமயத்தை பின்பற்றுபவர்கள் உலகில் பரவலாக வாழ்ந்தாலும் அதிகமான மக்கள் தென்னாசிய வலயத்திலேயே அதிகமாக வாழுகின்றார்கள். எனவே, இந்து சமயம் எவ்வாறு மனிதர்களிடம் நற்குணங்களையும், நம்பிக்கையையும் உருவாக்குகின்றது என்றால் சிலை வழிபாடுகளின் மூலமாக மக்களிடையே நற்குணங்களை விதைத்திடச்செய்கின்றது.

அடுத்ததாக பௌத்த சமயத்தை எடுத்துநோக்கிவோமாயின், கௌதம புத்தரை முதற்கடவுளாகக் கொண்டு அவரின் "பஞ்சசீல" கொள்கைகளின் அடிப்படையில் பௌத்த சமயம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கருணையே வடிவான கௌதமப் புத்தரின் பிறப்பு இந்தியாவின் புத்தகாயாவில் நிகழ்ந்தது. இவருக்கு அரசமரத்தின் கீழ் ஞானம் அடைந்து பௌத்த சமயத்தின் கொள்கைகளையும், போதனைகளையும் மக்களிடையே பரப்பினார். இவரின் போதனைகளை உள்வாங்கிய மக்கள் பௌத்த சமயத்தை பின்பற்ற ஆரம்பித்தனர்.

பௌத்த சமயமானது இரு பிரதான பிரிவுகளை உள்ளடக்கிய-
-தாகும். அவை தேரவாதம், மகாயானம் என்பவையாகும். தேரவாதம்
புத்தரின் போதனைகளையும், மகாயானம் கொம்பூச்சியஸ் தத்து-
-வங்களின் ஊடான அடிப்படைகளில் உருவாக்கப்பட்டுள்ளதாகும்.
இவ்வாறு இருவகைப்பட்டிருந்தாலும் முழுமுதற்கடவுளாக கௌதம
புத்தரையே வழிபடுகின்றனர். இச்சமயம் மக்களிடையே அன்பு,
கருணை, நம்பிக்கை போன்ற நற்குணங்களை கட்டியெழுப்புவத-
-ற்கான கொள்கைகளின் அடிப்படையிலேயே செயற்படுவதை நாம்
கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது. பௌத்த சமயத்தை
பின்பற்றுவதற்கான சுதந்திரம் உலக நாடுகளிடம் காணப்படுகி-
-ன்றது. சுதந்திரமாக இச்சமயத்தை பின்பற்றும் போது மேற்குறிப்பிட்
-ட மக்களை நல்வழிப்படுத்தக் கூடிய மனிதாபிமான குணங்கள்
மக்களிடையே விருத்தியாகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை
எனலாம்.

மூன்றாவதாக அன்பே உருவான இஸ்லாமிய சமத்தை
எடுத்துக்கொண்டால் ஆனால், இங்கு அல்லாவை முழுமுதற்கடவுளாகக்
கொண்டு நபிகள் நாயகத்தின் மேலான போதனையின் அடிப்படை
-யில் இச்சமயம் தோற்றம் பெற்றுள்ளது. இச்சமயத்துடன் ஏனைய
சமயங்களை ஒப்பிடும் போது ஆண், பெண் இருபாலாருக்கும் அதிகள-
-வான கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், நபிகள்
நாயகத்தின் போதனைகளும், இஸ்லாமியர்களின் புனித நூலாகிய
'திருக்குர்ஆன்" என்ற புனித நூலின் அடிப்படையிலும் சிறந்த மனித
நேயக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இச்சமயமும் உலகில்
பரவலான நாடுகளின் மக்களால் பின்பற்றப்படுகின்றனர். இஸ்லாமிய
சமயமும் ஏனைய சமயங்களைப் போலவே மக்களுக்கு நன்னெறிகளை
-யும், பொறுமை, கருணை, நம்பிக்கை போன்ற மனிதாபிமான
குணங்களை கற்றுத்தருகின்றது. மேலும் மற்றவர்களுக்கு உதவும்
தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, மனிதநேயப்பண்புகளையும்
கற்றுத்தருகின்றது. இஸ்லாமிய மதத்தை பின்பற்றும் மக்கள்
நற்குணங்கள் உடையவனாகவும், மனிதாபிமானமுள்ளவனாகவும்
மனிதநேயம் கொண்ட சிறந்த மக்களாக உருவெடுப்பான் என்பதில்
எவ்வித ஐயமும் இல்லை எனலாம்.

இறுதியாக உலகின் அதிகமாக

பின்பற்றப்படும் கத்தோலிக்க சமயத்தை எடுத்துக்கொண்டுவோமாயின், இயேசுநாதரின் போதனைகளின் அடிப்படையிலும் விவிலியத்தின் குறிப்புகளின் அடிப்படையிலும் தோற்றம் பெற்றுள்ளது. இச்சமயமானது மத்தியகாலத்தில் (இருண்டயுகம்) இச்சமயமானது அராஜகபோக்கிலான முறையில் திருச்சபைகளும், பாப்பரசர்களும் செயற்பட்டமையினால் இச்சமயத்தை சேர்ந்த சில முக்கிய தலைவர்களினால் உதாரணமாக ஜோன் வைக்கிலின், மார்டின் லூதர் போன்றவர்கள் இச்சமயத்தை விமர்சித்தனர். இதன் விளைவாக "புரட்டஸ்தாந்து" என்ற புதிய சமயம் உருவானது. பின்னர் கத்தோலிக்க சமயத்தின் பிரதான இரு சமயப்பிரிவுகள் உருவானது. அதாவது கத்தோலிக்கம் ரோமன் கத்தோலிக்கம் (R.C) ரோமன் கத்தோலிக்கம் அல்லாதவர்கள் (NRC) எனவும் இரண்டாக பிளவுபட்டனர். இவ்விரு பிரிவினருமே இயேசுநாதரையும், விவிலியத்தையும் அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. இச்சமயத்தின் பிரதான நூலாக "பைபிள்" விளங்குகின்றது. இச்சமயத்தவரும் கத்தோலிக்க மதத்தை பின்பற்றி நல்ல குணங்களாகிய மனிதாபிமானம், பொறுமை, நம்பிக்கை மன்னிக்கும் குணம், கருணை, அன்பு, மற்றவர்களுக்கு உதவும் தன்மை போன்ற குணங்களை பெற்று நன்மக்களாக வாழ்கின்றனர். இச்சமயமும் மக்களிடையே நற்பண்புகளை கட்டியெழுப்புவதற்கான கொள்கைகளைக் கொண்டுள்ளது. இக்கொள்கைகளின் அடிப்படையில் மனிதர்களிடையே புரிந்துணர்வு, மனித நேயம் போன்ற உயரிய குணங்களைப் பின்பற்றுவதன் மூலம் சிறந்த மனிதர்களாகவும், சிறந்த பண்புடையவர்களாகவும் தோற்றம் பெற இச்சமயம் வழிவகுக்கின்றது. இச்சமயத்தில் தற்காலத்தில் பல்வேறு போதகர்கள் சமயத்தின் முக்கியத்துவம் பற்றியும் மனிதர்களிடம் காணப்பட வேண்டிய சிறந்த குணங்கள், தீயகுணங்கள், சமயத்தின் முக்கியத்துவம், அதை பின்பற்றும் முறைகளும், இதனால் கிடைக்கும் நன்மைகள் என்பவற்றினை பிரச்சாரங்கள் மூலம் மக்களுக்கு தெளிவூட்டி வருகின்றனர். எனவே, சுதந்திரமாக சமயத்தை பின்பற்றுவதன் ஊடாக மனிதநேயம் போன்ற மேற்குறிப்பிட்ட பண்புகளையும், நல்லபழக்கங்களையும் மக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் போன்ற பிரதான நான்கு சமயங்களும் மனிதர்களை நல்வழிப்படுத்தி அவர்களுக்கு கருணை, அன்பு, பொறுமை, மன்னிப்பு, நம்பிக்கை, மனிதாபிமானம் ஒற்றுமை, மற்றவர்களை மதிக்கும் குணம் போன்ற நற்குணங்களை வளர்ப்பதில் முனைப்புடன் செயற்படுகின்றனர்.

மறுமலர்ச்சி காலத்தில் தேசிய அரசுகள் உருவான போது ஒரு இனத்திற்கு ஒரு நாடு என்ற நிலைக் காணப்பட்டது. எனவே, பெரும்பாலும் ஒரே சமயத்தை பின்பற்றுபவர்கள் ஒரு நாட்டில் வாழ்ந்தனர். ஆனால், தற்காலத்தில் பெரும்பாலான நாடுகள் பலகலாச்சார நாடுகளாக பெரும்பாலும் தோற்றம் பெற்றுள்ளனர். பலகலாச்சார நாடுகள், பல்வேறு மொழிகளைப் பேசும், பல்வேறு சமயத்தவர்கள் ஒரே நாட்டில் வாழ்வது "பற்கலாச்-சார நாடு" எனப்படுகின்றது. எனவே, பல்வேறு மதத்தவர்கள் ஒரே நாட்டில் வாழும் போது மத சுதந்திரம் காணப்படுவது மிக அவசியமாகின்றது. எனவே, ஒரு மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரமாக பின்பற்றுவதன் ஊடாக மன்னிப்பு, பொறுமை, நம்பிக்கை, மனிதநேயம், கருணை போன்ற நற்குணங்கள் விருத்தியடையும். இதற்கு, எல்லா சமயங்களும் எவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன என்பதை பற்றும், சமயங்கள் ஒரு மனிதனுக்கு எவ்வளவு முக்கியமான ஒன்று என்பதைப்பற்றியும், சமய முக்கியத்துவம், மனிதனுக்கு எவ்வளவு அவசியம் என்பதையும் இக்கட்டுரையின் மூலம் தெளிவாக விளங்குகின்றது.

Name:- Noor Mohamed
Mohamed Munawwar

Age:- 27

E_mail:- .MMohamedmunawwar@gmail.com

ID_No- 942472080V

Age on the
Submissiondate:- 27years and 1week.